ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2026/6 - 2017 ජූලි මස 03 වැනි සඳුදා - 2017.07.03

2026/6 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இலக்கம்:
கெஒஎல்டிஎஸ்/எல்என்டி/05/ஏஸிகிவு/11.
காணி அமைச்சு குறிப்பு இலக்கம்: ஜெ/76/இ/564.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

மக்கள் செயற்பாடு - ர/புழுத்தொட்டை கனிஸ்ட பாடசாலைக்கு காணி பெற்றுக்கொள்ளல்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

முதலாவது அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவில், கொலொன்ன கோரளை சிறு பிரிவில் இலக்கம் 202 புழுத்தொட்டை கிராம அலுவலர் பிரிவில் உடவெலை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரால் தயார் செய்யப்பட்ட 2016.12.30 ஆந் திகதியினது கடைசிக் கிராமப்பட இலக்கம் 928, மேலதிக இல. 01, ஒட்டு இல. 01 ஐக் கொண்ட துண்டு இல. 189 ஆகக் காணப்படும் கடுகிதுல்கல ஹேன எனப்படும் காணியின் 0.4357 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்வரும் எல்லைகளுக்குள் அமைந்த காணித்துண்டு ஒன்று (01).

**துண்டு இல. 189; காணியின் பெயர்: கடுகிதுல்கலஹேன; உரிமை கோருபவர்: திப்பொடுவ விதானகெ சுகததாச மானவெல விதாரமகே ஜேன் நோனா கொடிதுவக்கு ஆரச்சிலாகே மொஹொட்டி அப்புஹாமி; விஸ்தீரணம்: 0.4357 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இல. 141, 188 உம் 187; கிழக்கு: துண்டு இல. 188, 187 உம் 923; தெற்கு: க. கி. ப. 923 (புழுத்தொட்டை); மேற்கு: துண்டு இல. 141, 188 உம் 187.

இரண்டாவது அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவில், கொலொன்ன கோரளை சிறு பிரிவில் இலக்கம் 202 புழுத்தொட்டை கிராம அலுவலர் பிரிவில் புழுத் தொட்டை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரால் தயார் செய்யப்பட்ட 2017.01.17 ஆந் திகதியினது கடைசிக் கிராமப்படம் இலக்கம் 923, மேலதிக இல. 0 10/5 படத்தில் கொண்ட துண்டு இல. 243 உம் 244 ஆக காணப்படும் எல்தெனிய ஹேன/ கடுகிதுல்கலஹேன எனப்படும் காணியின்

0.0624 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்வரும் எல்லைகளுக்குள் அமைந்த காணித் துண்டுகள் இரண்டு (02).

**துண்டு இல. 243; காணியின் பெயர்: எல்தெனியஹேன; உரிமை கோருபவர்: சமரசிங்ககே சயிமன்; விஸ்தீரணம்: 0.0215 ஹெக்டயார்.**

வடக்கு: க. கி. ப. 928 (உடவெலை) உம் துண்டு இல. 244; கிழக்கு: துண்டு இல. 244, 246 உம் 245; தெற்கு: துண்டு இல. 245; மேற்கு: க. கி. ப. 928 (உடவெலை).

**துண்டு இல. 244; காணியின் பெயர்: எல்தெனிய ஹேன/ கடுகிதுல்கலஹேன; உரிமை கோருபவர்: கரனம்முனிகெ பபுன்கிரா; விஸ்தீரணம்: 0.0409 ஹெக்டயார்.**

வடக்கு: க. கி. ப. 928 (உடவெலை); கிழக்கு: துண்டு இல. 246; தெற்கு: துண்டு இல. 246, 245 உம் 243; மேற்கு: க. கி. ப. 243.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு, கொலொன்ன பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். எம். டி. ஸி. சமரசேகர,
பிரதேச செயலாளரும்
காணி எடுத்தல் உத்தியோகத்தரும்,
கொலொன்ன.

பிரதேச செயலகம்,
கொலொன்ன,
2017, யூன் 22.

7 - 499

## திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 7/3/1/13/பாரிய/மா/சுவீ.
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு
இலக்கம்: 4/3/9/2013/WS/473.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் பிரகாரம் இலக்கம் 2019/3 மற்றும் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி உடைய அதி விஷேடமான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உரிமைக் கோரல் பரிசீலனை 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இப்பரிசீலனை செய்யப்பட உள்ளது என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

டப்ளிவ். எம். ஆனந்த,
பிரதேச செயலாளர்,
பல்லேபொல.

பிரதேச செயலகம்,
பல்லேபொல,
2017, யூன் 28.

7 - 500

---

## திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இலக்கம்: MCUDP/LA/ABT (W-05)/ 14/03.
காணி அமைச்சின் தொடர்பு
இலக்கம்: 4-3/10/2014/LRB/292.

மேற்படி தொடர்பு இலக்கத்தின் கீழ் காணிகள் எடுக்கும் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல், அறிவித்தல் இலக்கம் 2016/17 மற்றும் 2017 ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலிலுள்ள அந்த காணிகளுக்காக உரிமைகூறும் அல்லது வேறு தொடர்புகள் தெரிவிக்கும் நபர்கள் எல்லோரும் தத்தமது அல்லது அவர்களின் ஆவணங்கள் மூலம் தத்துவமளிக்கப்பட்ட நபர்கள் 2017, மே மாதம் 31 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு, இராஜகிரிய, வெலிகட, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 என்னும் இடத்தில் இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான கூட்டுத்தாபனத்தில் அமைந்துள்ள கொழும்பு தலைநகரம் அண்டிய மாநகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் காணிகள் எடுக்கும் அலுவலகத்தில் என்னை சந்திக்கும்படி அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்தந்த திகதி மற்றும் நேரம் 2017 யூலை மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு என திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் அறியத் தருகின்றேன்.

சீ. டபிள்யூ. அபேசூரிய,
காணிகள் எடுக்கும் அதிகாரி,
கொழும்பு தலைநகரம் அண்டிய
மாநகர அபிவிருத்தி செயற்றிட்டம்.

கொழும்பு தலைநகரம் அண்டிய
மாநகர அபிவிருத்தி செயற்றிட்டம்,
இல. 03, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகட,
ராஜகிரிய.
2017, யூலை 03.

7 - 501

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.